01-11-2016

# படைப்பு

சமூகத்தின் இணைப்பு

# மின் இதழ்

## பதிப்பு -6



பச்சை மஞ்சள் சிவப்பு
----------------------------

என் கண்களில் செழிக்கும்
பசுமை அருவியாய்ப் பெருக்கெடுத்து
சுவாசத்தில் நிரம்பி
இதய அறைகளை நிரப்பி
என் செல் ஒவ்வொன்றிலும்
ஆர்கிட்களைப் பூக்கச் செய்கிறது

இலை நுனியில் விரல் நுனி பட்டால்
ஏற்படும் சில்லிப்பு ஒரு நொடியில்
மூளையைக் குளிரச் செய்யும்

ஒரு துளி அசையாமல்
என்னையே நோக்கும் இலைகள்
புத்தனின் மறு பிறப்போ!

காற்றிலாடும் இலைகள்
என் கவனத்தை ஈர்த்து
அதன் மேலோடிய வரிகளில்
என்னை பதிய வைக்கின்றன

மழைத் துளிகளை
மார்பில் ஏந்திக்கொண்ட இலைகள்
காதல் வனப்பின் உச்சம்

ரகசிய பேச்சுக்கள்
இலைகளின் புரிதல்கள்
காற்றின் வழிக் காவியமாய்
மலர்ந்திடும் மொட்டுக்கள்

இதழ் திறந்த
செம்பூக்களின் சுகந்தம்
இழையோடுகிறது

என் வழியெங்கிலும்

அசையாமல் ஒரே இடத்தில்
நின்று அருகிலிருக்கும் யாவருக்கும்
மலர்ப் படுக்கை விரிக்கும்
அந்த மஞ்சள் பூக்கள் சொரிதலில்
நுழைந்து பூக்களின் இதழ்களில்
படுத்துறங்கி இந்தப் பிறவியின்
ஜென்மத்தின் அழகியலில்
லயித்து வாழ்ந்து விட வேண்டும்
ஒரே ஒருமுறை!!

--- கார்த்திகா அ

போட்டிக்கென
காளிவேஷம் போடுகையில்
அடிவயிற்று வலிகளை
யாரிடமும் சொல்லாமல்
அப்படியே மேடை ஏறியாச்சு
கோப்பையும்
வெற்றியோடு வாங்கியாச்சு

வாங்கி வந்த கோப்பையை
சாமி படத்தின் முன்பு வைக்க
மூன்று நாள் ஆகட்டுமென
அம்மா சொல்லியாச்சு
இன்னும் ஜெயிக்கவே
இல்லைன்னு
இப்போதான் புரிஞ்சுபோச்சு

--- அகதா

கற்பின் பிழை.

----------------------------

வேசியென
அறிமுகமாயிருக்கலாம்
அவள் முகம் சிலருக்கு.

அதீத அன்பின்பிடியில்
சிக்குண்டதொரு தருணத்தில்
தன்னிலை மறந்து
தன் காதலுடன்
ஒன்றறக்கலந்த
பாவத்தின் மிச்சமாய்
பிறந்திருந்த மகளுக்கு
அவள் முகம்
பரிசுத்தமானதுதான்.

தன் உடலின் இச்சை
தீர்ந்த மதமதப்பில்
எச்சிலிலையாய்
அவளை வீசிச்சென்ற
கயவனைக் காதலனாய்
உருவகித்ததுதான்
அவளின் பிழை.

இருவுயிரின் பசிதீர்க்க
பலரின்பசிதீர்க்கத்
துணிந்தவளவள்.

பள்ளிப்பயிலும் மகளின்
கல்விச் செலவிற்காய்
கலவியிலிருக்கும்
அவள் எண்ணங்கள் மட்டும்
சுவரின் பல்லிகளை ரசித்தபடியே
கடக்கிறதந்தச் சாமத்தில்.

ஓரிரவு மனைவியின் பிரிவில்கூட
கதகதபிற்காய் இவளை நாடும்
காளையர்கள் கற்புள்ளவரெனில்
வேசியென்று எப்படியுரைப்பீர் இவளை.

--- குமரேசன் கிருஷ்ணன்

நான் போராளி
வாழ்க்கையில்
தோற்று
நிராயுதபாணியாய்
ஆனாலும்
ஒரு ராமன்
"இன்று போய்
போருக்கு
நாளை வா"
அதானால்
வாழ்கிறேன்
இன்னுமொரு
போராட்டத்திற்கு.

--- சசி

வட்டமிட்டுக்கொண்டிருக்கும்
வறுமையை விரட்ட
ஒலி எழுப்பியபடி
வீதியில் அலைகிறேன்
ஒரு வெயிலென

தூக்கம் புதைத்த இடத்தை
மறந்த விழிகள்
மண்ணுளிப் பாம்பாக
இரவை நெம்புகிறது
கனவைச்சுமந்தபடி..

சாலையெங்கும்
சாமம் வழிந்தோட
நான் செய்த
தூக்கக்கொலைகள்
கொட் "ஆவி"யாய்
தொடர்ந்தபடி
இருக்கிறதென்னை.

நகரத்தின் பேரமைதியை
ருசித்தபடி நகர்ந்துபோகின்றது
மாடொன்று அண்ணாசாலையில்.

திருநங்கைகள் உலவும்
திருப்பமொன்றில்
விருப்பமின்றி கடக்கின்றேன்
இந்த வாழ்வை.

வீதியொளிரும் சோடியம்
விளக்குகளுக்குக் கீழ்
நீங்கள் நிலாவென்று
சொல்லப்படுகிறவன்
வாழ்கிறான்.

தலைகீழாகத்
தொங்கியாவது
வாழ்ந்தாகவேண்டும்.
எனக்கு விதிக்கப்பட்ட
இந்தவாழ்வை
ஒரு
வௌவாலைப்போல!

--- நிலாகண்ணன்.

அங்கே
உயரத்திலிருந்தபடியே
கண்ணுக்கு
விருந்தளித்துக்
கையசைக்கும்
உயிர்ப்புள்ள
பசிய இலைகளையும்விட
இணக்கமானவை
குழந்தைகளுக்கு ..
தம் விருப்பத்துக்கு
ஈடுகொடுத்து
என்னசெய்தாலும்
இணங்கித் தம்
காலடியில் கிடக்கும்
சருகுகள்!

--- வளவன் கரிகாலன்

திருவிழா காலங்களில்
அருள் வந்து ஆடும் சாமியாடிகள்
காத்து கருப்புகளை விரட்டி
ஊர் எல்லை தாண்டி
விட்டு விட்டு வருகிறார்கள்...
அடுத்த ஊர் சாமியாடிகளும்
அப்படியே விரட்டுகிறார்கள்...
இரண்டு எல்லை கோடுகளுக்குள்
விழிபிதுங்கி நிற்கும் காத்து கருப்புகள்
பின் ஏனோ......
தமக்குத்தாமே
சமாதானமடைந்துகொள்கின்றன...
தங்களது எல்லைப்பிரச்சனைகள்
திரு விழா முடிந்தவுடன்
தாமாகவே தீர்ந்துவிடும் நம்பிக்கையில்...
ஆனால்........
அவைகளுக்குள் ஓர் ஆதங்கம்
எப்போதும் வந்து முட்டி மோதுகிறது...
உலகமெங்கும்
இரு நாட்டு எல்லைகளில்
சிக்கித்தவிக்கும் மக்களின் வாழ்வு
நம்மைப்போல் அவ்வளவு எளிதாய்
இருந்து விடுவதில்லையே எனும்
வருத்தங்களுடன் அவை
எல்லைகளை வகுத்தவனை
வசைபாடியபடி....
முடியப்போகும் திருவிழாவிற்காக
எல்லைகளில் காத்திருக்கின்றன....
அவைகளுடன் சேர்ந்து
நம் பிரச்சினைகளும்
முடிவுக்கு வராதா என
ஏக்கத்துடன்
காத்திருக்கிறார்கள் மக்கள்...
--- சந்துரு

தலைப்பில்லாத் தலைகள்...
----------------------------------
எனக்கான உருவங்களை
அவர்களே வரைந்திருந்தார்கள்..
விரும்பிய வண்ணங்களில்
என்ன அழகுப்படுத்தி ஆரவாரித்திருந்தார்கள்
தங்கள் வண்ணங்களை
இன்னொருவர் மேல் பூசிவிட்ட பூரிப்பில்
எக்காளச் சிரிப்புகளைத்
தங்களுக்குள் பரிமாறிக் கொண்டார்கள்
ஒவ்வொரு மனதிலும் நாறிய குப்பைகளை
மற்றொருவர்மேல் ஏற்றிவிட்ட ஆணவம்
நடைகளில் நாடகமாடியது
விரல்மாற்றியோ கைமாற்றியோ
எழுதி ஏமாற்றியதில்
தங்கள் கெட்டிக்காரத்தனத்தைத்
தாங்களாகவே புகழ்ந்து கொண்டார்கள்
மனதின் வக்கிரங்களில்
மிருகங்கள் தாராளமாகவே வெளியேறின
பெயர் மறைத்து
ஏதோ ஒரு பொய்ம்மைக்குள் ஒளிந்து
முகமின்றி உலாவிய அதை
அவ்வளவு சீக்கரம்
நிராகரிக்க முடியவில்லை..
மொட்டைக் கடிதமென்று!

--- முனியாண்டி_ராஜ்.

நேற்றிரவிலிருந்து கூச்சலிட்ட
கருநிறக் கடுவன்
வீதி நாய்களுக்களுக்கு
தலைவனாவான்
முதல் முறையீடாக
பின்பக்க
இடதுகாலை உயர்த்தி
சிறுநீர்க் கழிக்கும் கம்பம்
ஒளிர்தலை நிறுத்தி
ஒருவாரம்
ஆனதென்றான்

வெள்ளை பெட்டை
பேச வரும் முன்னமே
கேட்க ஆர்வம் காட்டிய
சாம்பல் நிறத்தவன்
கடந்த ஆண்டு
அவள் கர்ப்பம் தரிக்க
காரணமானவன்

அடுத்த முறையீடாக
செவிலி நிற பெட்டை
தான் ஈன்ற குட்டிகளை
கொசு கடிப்பதாக
புகார் அளித்தது
மழை வரும் காலத்தில்
தெருவெங்கும்
நீர் தேங்கி கிடப்பதால்
தாவி குதிக்க முடியாததை
மூன்று கால் வெள்ளையன்
சொல்லி வருத்தப்பட்டான்
வால் நீண்ட கிழட்டு முகம் கொண்டவர்
கடந்த சனிக்கிழமை
கைபேசியை பார்த்து வந்த ஒருவன்
தன் கால் மிதித்த
கதையை அழுது முடித்தார்
ஹைபிரிட் வகைகளை வளர்ப்பதால்
மதிப்பற்ற சூழல் நிலவுவதாக
புமேரியனை காதலிக்க முயன்ற
மூக்கொழுகிய
குட்டி ஒன்று கூச்சலிட்டது

நியாயம் கோரி கோசமிட்டதை
ஊளையிடுவதாக எண்ணி
கல்லொன்றை வீசியவன்
கைகளில் மையிட்டு இருந்தான்
ஒவ்வொரு ஐந்தாண்டும்
ஊமையாக இருப்பதென்று
உறுதிமொழி அளித்து .

--- இவன் தங்கா

வரைந்து
முடித்த
மீன்
தாளைக்
கடலாக்கி
நீந்திச்
செல்கிறது ..

--- மீயாழ்

மரத்திலிருந்து
முதிர்ந்த இலையொன்று உதிர்வதைப் போல
நிகழ்ந்திருக்கலாம்
நம் பிரிவு.

நாம் வழக்கமாக தேனீர் அருந்தும்இடத்தில்
எதிரெதிரே அமர்ந்தபடி
வழக்கமாகக் கேட்க்கும் பாடல்களைக் கேட்டபடி
வழக்கம்போல் பாதிஅருந்திய குவளைகளை
பரஸ்பரம் மாற்றிக்கொள்வதை
கவனமாகத் தவிர்த்து

இனி தொடரமுடியாத காரணங்களை
என் பார்வையைத் தவிர்த்தபடி
உதடுகளை அழுந்தக்கடித்தபடி
இமைகள் மினுங்க
நீ சொல்லியிருக்கலாம்,

கழுத்தில் கத்தியை வைத்து,
காலில் விழுந்து கதறி
காதலை மலர வைக்கும்
நீ
பார்த்த திரைப்படங்களின் கதாநாயகர்கள்
கலவரப்படுத்தியிருக்கவேண்டும் உன்னை

மடியில் படுத்துறங்கிய குழந்தையின்
கழுத்தையறுத்து
குருதி வழிய வழிய
உச்சிவெயிலில்
சுடுமணலில் வீசியெறிந்த
படுபாதகத்தை
செய்திருக்க வேண்டாம் நீ.

இத்தனைக்குப் பிறகும்
உன்மீதான புகார்கள் ஏதுமில்லை என்னிடம்.

--- சிவகுமார் கனேசன்

என் மன வனமெங்கும்
எதிரொலித்துக்
கொண்டேயிருக்கிறது
அப்பா வாவென்று
அலைபேசி வழியழைத்த
அவனின் ஒற்றைக் குரலோசை

நிசப்தத்தை உருவாக்கிவிட்டு
மீண்டும் மீண்டும்
ஒலித்து
கலைத்துப் போடுகிறது
என் கானகத்தை
அவன் பிதற்றலொலி

தேர்தல் பயிற்சி வகுப்பை
முடித்துவிட்டு
மாவட்டங்கள் பல கடந்து என்
ஊர் செல்லும் பேருந்தை விரைந்து
பிடிக்க வேண்டும்

திரிந்த
என் கானகம்
மீண்டும் தன்
இயல்பு நிலைக்குத் திரும்ப

--- மகேஷ் சிபி

## மனிதாபிமானம்

-----------------------

தொப்புள் கொடி அறுக்கப்படாமல்
இரத்தத்தின் ஈரம் காய்ந்திடாமல்
கழுத்தை நெரித்து மூச்சை நிறுத்தி
குப்பையாய் சுருட்டி வீசியது
தெருவோரத்தில் இன்னும் மூச்சுத்திணறுகிறது.

கல்வியின் ஈர்ப்பால் கல்லூரி செல்லும் மங்கையர்.....
மோகத்தின் ஈர்ப்பால்
பித்துப்பிடித்த ஆசான்கள் கைகளில்
சிக்கி சிறகுகள் பிய்க்கப்பட்டு சிறைப்பட்டு கிடக்கிறார்கள்

சோறு போட்டு சோகம் தீர்த்த
உறவுகளை பணத்திற்காக
கொஞ்சமும் சலனமில்லாமல்
கொன்று குவித்து இரத்தம்
பருகிடும் காட்டேரிகள்

இரக்கத்தின் ஈரம் நனைந்து போக
வறண்ட உள்ளங்கள் வெடித்து
வேலைப் பாய்ச்சினாலும்
இரத்தம் கண்டிடாது குரோதங்கள்
குமுறி பீறிட்டு பாயும்..

மனிதம் என்பதை கூவி விற்கும்
மனிதர்களிடம் மனிதாபிமான
தேடுபவன் மூடனாகத்தான் இருப்பான் என்னைப்போல....

--- ஆய்ஷா ஷப்னி

அதிகாலை
வேலைக்கு கிளம்புகையில்
இன்று நிகழலாம்
என்று தோன்றியது.
முதல் வீட்டில்
பெருக்கிக் கொண்டிருக்கையில்
இடுப்பில் வலித்தது.
ஐந்தாவது வீட்டில்
துணி துவைக்கையில்
முதுகுத்தண்டில்
பெருவலி துளைத்தது.
கடைசி வீட்டில்
பாத்திரம் கழுவுகையில்
தோன்றிய
அடிவயிற்று வலியில்
சந்தேகம் வலுத்தது.
மூத்தவளுக்கு பிஸ்கட்டும்
இளையவளுக்கு பாலும்
வாங்கிக் கொண்டு
வீடு திரும்புகையில்
பனிக்குடம் உடைந்து வழிந்து
உறுதிபடுத்தியது
ஆறு மாதத்திற்கு முன்
இறந்திருந்த
கணவனுக்காக
பூவழித்து பொட்டழித்து
விதவைக்கோலம்
ஏற்கும் நாள் இன்றென்பது

--- பா. வனிதா ரெஜி

நான் காற்றாகும்
கணம் வரைக்குமாவது ......

மேகத்திரள்களினிடையே,
நீலத்தினை காட்ட முயலும்
ஒரு அந்தரித்த வானமாய் இரு...

“ஆஸ்துமா” ரோகியின்
வெளித்தள்ளும் மூச்சு போன்ற
உன் இருத்தலுக்கான பிரயத்தனம்,
என் “தெளிவாக்குதல்களின்” பின்னே
உன் நிரந்தரத்தினை அத்திபாரம்
செய்யும் .......

அப்பால் ......
நீண்ட நதியில் உன்
பிம்பம் நீராடும் யாருமற்ற
நெடுஞ்சாலையாய்.....

ஒரு பக்கவாத பறவையின்
சூம்பிய இறகுகளுக்குள் என்
இருப்பினை குறுக்கி கொள்கிறேன் ......

காலத்தால் கனிய வைக்கவியலா
இந்த ‘காய்த்தல்” பருவத்தின்
இரு காய்கள் மட்டும்
இப்படியே
வெம்பி .......
வெதும்பி .......

---லலித்தா

ஒவ்வொரு விடியலும்
முன்கூட்டியே கொண்டு வருகிறது....
பூக்களுக்கான மரணச் செய்தியை

உதிர்ந்த பூ
இருக்கிறது....
காம்பின் நிழலில்

எறும்பை தட்டிவிடாதே!
அது குழப்பவில்லை....
புத்தனின் தியானத்தை

ஒரு பறவை
தன் சிறகால் அடிக்கிறது....
வானத்துக்கு

தேனீர் குடிக்க தலை தாழ்த்துகையில்
கோப்பைக்குள் விழுகிறது....
என் முகம்

ஒரு பெரிய பாறை
ஆடியாடிக்கொண்டிருக்கிறது....
குளத்தின் மேல்

தலைக்கு மேல் பட்டாம்பூச்சி
என்னூடலில் பறந்து விளையாடுகிறது....
கறுப்பு நிழல்

கூண்டுக் கிளி
விடுதலை பெற்றது....
உயிர்போன பின்பு

--- பா.தா

சூழ்ச்சிகள் நிறைந்த
வாழ்க்கையிது – மண்ணில்
வீழ்ச்சிகள் பரவும்
சேர்க்கையிது.

காட்சிகள் தெளிவாய்
தெரிந்தாலும் – கண்ணில்
மாட்சிமை மறைக்கும்
போலியிது.

உண்மை போலவே
வெளித்தெரியும் – அதை
உரசிப் பார்த்தால்
நிலை புரியும்.

சிலந்தி வலையைப் போலவே
நினைப்பாய் – அது
சதிவலை என்றதும்
திகைப்பாய் .

கூட இருந்தே
குழிப்பறிக்கும் – கெட்ட
குள்ள நரிகள்
கூட்டமடா ........

ஆட விட்டே
கால் உடைக்க – சிலர்
ஆனந்தம் கொள்வதில்
நாட்டமடா .........

கூனியும் சகுனியும்
கூட்டாக – இங்கு
குத்து வெட்டுவார்
வேட்டாக ..........

சூதுகள் நிறைந்த
உலகமடா – அது
சூழ்ந்ததனால் தான்
கலகமடா ..........

--- கவிஞர். ஏரூர் கே. நௌஷாத்

பம்பரம்.. கோலி.. கில்லியாடி..
பாண்டி.. பல்லாங்குழியாடி..
ஆற்றில் நீந்தி.. ஆல விழுதாடி..
கிணற்றின் மடி தொட்டு..
மலையின் தலை தொட்டு..
காடு கழனியெல்லாம் கால்களளந்து..
கூடிக் கூட்டாஞ்சோறு சமைத்து..
கொஞ்சிக் கதைகள் பேசி..
பட்டாம்பூச்சியென சிறகடித்த சிறுவர்கள்
பரிணாம வளர்ச்சியில்
பறக்க விட்டு கொண்டிருக்கிறார்கள்
அடைப்பட்ட நகரத்து கூடுகளில்
ஆங்ரி பேர்டுகளை ஒவ்வொன்றாக...

--- மணி_அமரன்

ஆயிரம் ஆண்டுகளின் சாட்சியாய்
சடசடவென எழுந்தமரும்புறாக்களின் சிறகசைப்பில்
சிதைந்த சிற்பங்களின் இடைவெளியல்
உயிர்த்த செடிகள் அசைந்தடங்கிய கோபுரத்தை,
முன்னொரு காலத்தில்
அடர் வனத்தின் நடுவிலிருந்து
இன்று தனியே மீதமிருக்கும்
ஒற்றை ஸ்தல விருட்ஷத்தை,
பூஜைவேளையில்
கனத்த குரலில் நாவசைக்கும் மணியை,
கவனிப்பாரற்ற நுட்பமான சிற்பங்களைப்
பார்த்து வியந்து
பச்சைப் படலமென நீர்ப்பரப்பில் விரிந்திருந்த
இலைகளினுடே தாமரைகள் பூத்திருந்த
தெப்பக்குளக்கரை மண்டபத்துணில்
யாழியை ரசித்தபடி ஓய்வாக சாய்ந்த
என்னுடல்பட்டு
அதிர்ந்த அழகிய நடனப் பெண் சிற்பமொன்று
திடுக்கிட்ட என்னைக் கண்டு சிரித்தபடி
அபிநயம் பிடித்திருந்த விரல்களைத் தளர்த்தி
ஆடைகள் திருத்தி
பின் மீண்டும் உறைந்த அற்புதத்தைச் சொன்னால்
உங்களில்
யார் நம்புவீர்கள்?

--- ஜி.சிவக்குமார்

மேல் நோக்கி கைகள் விரித்து
தன்னைதானே சுற்றி மகிழும் சிறுமியின்
குட்டைப்பாவாடை ராட்டினத்து பார்டரில்
ஜான் இடைவெளிகளில் இறக்கை முளைத்த
பட்டுக் குதிரைகள்..
'ஸ்லாஸ்' மாதிரி உடல் சரித்து
நின்று நகரும் ரயிலிலிருந்திறங்கி
அடுத்தப்பெட்டிக்கு தாவும்
திருநங்கையின் கைத்தட்டலில்
இடறுகிற தடக்தடக்...
தன்னைவிட குரலொடியக்கூவும்
கொய்யாவை கடக்கையில்
அசட்டுத்தனமாய் சிரித்து வாய்பிளந்திருக்கும்
தீர்ந்த கூடை..
இடப்பக்கம் கழுத்து வளைத்து
பொன் நிறத் தலையை சொறிந்தவாறு
அழுக்குபடர் கையை நீட்டியாசிக்கும்
சின்னப் பையனின் கக்கத்தில் விற்கமுடியாத
ஸ்டிக்கர் சாமிகள்..
பைத்தியக்காரனின் கைகளிலிருந்து
நழுவிச் சிதறும் ஒற்றை ரூபாயில்
நேற்று தோசைமாவுக்கடையில் வாங்க மறந்த
சில்லரை பாக்கியின் ஓசை..
வாழ்வின்
நுரைநாட்டியம்..!

--கனா காண்பவன்

*பைந்தமிழே பேசிடுவாய்*

*--------------------------------*

*சொல்லினிதாம் யாழினிதாம் மழலை*
*........... சொல்கேட்பார் செவியினிக்க நாளும்!*
*தொல்காப்பி யமொழியூண்றி வளர்ந்த*
*........... சொல்லுண்ணா சிறப்பதுவே மொழிக்கும்!*
*பல்லாயி ரமாண்டுகளாய் செழித்த*
*........... பைந்தமிழே செம்மொழியாம் உலகில்!*
*சொல்லெடுத்து சாற்றியதும் கண்டே*
*........... தோல்கொட்ட திக்கெட்டும் கேளீர்!*

*செந்தமிழே மூச்சாகி, சிந்தை*
*........... தேன்போலி னிக்குமொழி தமிழே!*
*வந்தபல வேற்றுமொழி யெல்லாம்*
*........... வாய்மொழியாய் நின்றிடாமல் வளர*
*சொந்தமண்ணில் விதியிதுவோ நமக்கு?*
*........... தொன்மையான மொழியென்றால் தமிழ்தான்,*
*பைந்தமிழே பேசிடுவாய் நாளும்*
*........... பைந்தமிழில் பெயரிடுவோம் நாமும்!*

*உயரத்தில் ஏற்றிவிடும் ஏணி*
*........... உலகத்தின் ஒளிநல்கும் தமிழே!*
*தயவோடு பிறமொழிபற் றவில்லை*
*........... தயைகாட்டும் செந்தமிழின் சிறப்பு*
*அயல்நிலத்து செல்வங்கள் தமிழில்*
*........... ஆழ்ந்தபொருள் கொண்டுமீட்க! கன்னிக்*
*கயல்விழிபோல் துள்ளியாடு மெங்கள்*
*........... பைந்தமிழை பேசிடுவாய் நாவாய்!*

– கவிஞர். கு. நா. கவின்முருகு.

*மழலைகளால்*
*மட்டும் எப்படி முடிகிறது*
*என்று தெரியவில்லை*
*தந்தையின் ஆள்காட்டி விரலை*
*நடைவண்டி ஆக்கி கொள்ள*

*--- பாரதி*

*அம்மன் திருவிழாவில்தான் முதன்முதலில்*
*பார்த்துக்கொண்டோம் அப்புறம் தீமிதி நாள்*
*அடுத்து தீபாவளியன்று...*
*பண்டிகை நாட்களில் எல்லாம் பார்த்துக்கொண்டோம்*
*பின் பார்த்துக்கொள்ளும் நாட்களெல்லாம்*
*பண்டிகைகளாயிற்று!*

*--- அகராதி*

*இறந்து விட்டிருந்த*
*ஒரு பெருநத்தையின்*
*வெண் முதுகு*
*கவிழ்ந்திருக்கிறது*
*பூசையறைகளில்....*

*மென்புகை நுகர்ந்தபடி*
*சைவப் படையலுக்காய்*
*காத்திருக்கிறார்*
*கடவுள்....!!!*

*--- கட்டாரி தமிழ்*

கடக் கடக் கடக் கடக்
----------------------

நான் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன்
காற்றைப்பிளந்து
அலைகளை உடைத்து
இன்னும் நிர்ணயிக்கப்படாத எனக்கான
என் எல்லையை நோக்கி

கேட்கும் அடிக்கொரு காலடிச் சத்தத்தோடு
முன்னெடுத்து கடந்தச்செல்லும் திடீரலைகள் மத்தியில்
பிடித்திருக்கிறது
என் கடத்தல் எனக்கு

மூலை வீட்டில் என்னைக் கிடத்திவைத்திருந்தபோது
இது நாள் வரை தொலைந்திருந்தவன்
வெளியே வந்தேன் பழசான நான்

திரண்டிருந்த வெண்மேகங்கள்
கையசைவு
போகும் இடமிங்கும் கிடைத்த உற்சாகத்தால்
நிற்காமல் ஓடி விரிகிறது முன்னே
ஏற்கனவே
தயாரிக்கப்பட்ட என் பயணம்

கடல் விட்டுக்கொண்டிருந்த மூச்சுக்காற்றில்
கலந்து தலைத்தூக்கும் அவ்வப்போதைய
அச்சத்தைத் துச்சமென எண்ணியபடி
உற்பத்தியாகிறது
இதயம் முழுதும் புது ரத்தம்

சவால்கள் ஒவ்வொரு முறையும்
நெஞ்சில் ஏறி
உட்கார்ந்தகொண்டு போடும் தடை

உத்தரவுகள் உடைக்கப்பட்டு
ஏதோ ஒன்று உந்துதலால்
வந்து விழுகிறேன் நான் யாருக்கும்
தெரியாத
கடல் தெருவில்

வேலியே இல்லாத வானில்
மறு நடவாய்
விதைக்கப்படலாம்
நட்சத்திரங்களாய்
நான்
நீ

--- கா.இலட்சுமணன்

அந்த
முதியோர் இல்லத்திலிருந்து
நடைப்பயிற்சியை
தொடங்கிய முதியவர்
இடையில் அடைந்த
களைப்பில்...
இளைப்பாறிய மரத்தடியை..
நிமிர்ந்து பார்த்து...
மௌனமாக
புன்னகைத்து கொண்டே...
கண்களை துடைத்துக்கொண்டார்..!!

பிறகுதான் புரிந்தது..
அம்மரம்
இலைகளே இன்றி
பட்டுப் போயிருந்தது..!!

--- எம்.செல்வகணேஷ்

குளம் தூர்த்து
கட்டிய வீட்டின் முற்றம்
தொட்டியில் அல்லிப்பூ !

மகிழ்நன் மறைக்காடு

தனித்திருக்கும் தருணத்தின்
முடிவற்றக் கண்களாய்
பயத்தின் சாயல்கள்
காற்றெங்கும் திசையறியாது
தனித்தலைகிறது மனது
சங்கடமான நிலைகள்
சந்தித்துப் பேசிய பேச்சுக்கள்
பயப்படாதே என்ற யார் குரலோ,
பிறகு யார் யார் முகங்களோ
பிம்பங்களாய் உருமாறி
மிரட்டலாய் அரங்கேறுகிறது
என்னுள்.
மரணத்தருவாயின் கடைசி நொடி
நினைவுகளின் குழப்பம்
வாழ்வின் சூட்சமம்
ஞாபகங்கள் சிதறும்
முடிவிலிகளின் வெளிகள்
உடல் அசைவில்லை
கடைசி பார்வை
தெறிக்கும் துளி மிச்சக் கண்ணீர்
பிணம் காக்கும் இரவின்
காற்றெங்கும் ததும்புகிறது
மரணத்தின் வாசனை!

--- ஆனந்தி ராமகிருஷ்ணன்

மரணமென்பதும்
கடத்தலைப் போல்
நிகழ்ந்து விடுகின்றது !

மீளாத் தூக்கத்தை
யாரெழுப்பி
என்ன செய்வது ?

மரணம் சிலருக்கு
விளைச்சலைக் கொடுக்கின்றது !

மரணம் சிலருக்கு
மரணத்தையே தருகின்றது !

ஆசைகளின் முடிவுதான்
மரணமாம் ,
ஆசைகளின் தொடக்கமும்
மரணம் தான் !

ஒப்பாரிகளின் சங்கீதத்தில்
ஊர்வலம் போகின்றது
மரணம் !

கண்ணீர்த் திவலைகளும்
கபர்ஸ்தானோடு
அடக்கம் செய்யப் படுகின்றன !

இறுதித் தூக்கமென்பது
இறந்தவனுக்கு மட்டும்தான்,
வாரிசுகளுக்குக் கிடையாது !

--- முகமதுபாட்சா

பறவைகளில்லா
திசையில்
வானம் வெறுமையே..

விரிக்க சிறகுகளில்லை
பறக்க வானமுமில்லை
அழுக இவையுண்டு..

புத்தகங்கள் காட்டும்
அலாதி பிரியம் கூட
சுற்றத்திடமில்லை..

நெடிய வார்த்தைகளும்
சிறிய எழுத்துக்களுமே
என் தற்போதைய
கையிருப்பு..

கை செலவுக்கு
வெறும் நினைவுகளே..

பொழுதுகளை கடத்துவது
இப்போது
மலைப்பாக இல்லை
இயல்பானதாயிற்று..

நிஜமெல்லாம் சுடுகிறது
நிதானமெல்லாம் உடைகிறது..

வாழ்வென்ன வாழ்வு
மரணமும் என்னை
நேசிக்கிறது..

காற்றை குடித்து
கவிதை திண்று
வரமில்லா தவமாய்
முடிவில்லா இவ்வுலகில்
நானும் ஓர் அற்ப பிறவி..

--- கோபி சேகுவேரா

ஓர் உயிர் பிறத்தலுக்கு முன்
ஒரு நொடியும்
ஓர் உயிர் பிரிதலுக்கு முன்
ஒரு நொடியும்
நொடிதான் எனினும்
நெடிது....!!
------ முரளி

சிறைப் புறா
அடைபட்ட கூண்டிலிருந்து
பிடிபட்ட என்னை
சமாதானம்
என்றார்கள்
வெண்மை அழுக்கானது

--- சே தண்டபாணி தென்றல்

வண்ணத்துப்பூச்சியின்
அதிகூடிய மென்மையின்
வண்ணங்களுக்குள்
அன்பை இழைத்துப்பரவசித்துப்
பின் பரிகசித்துப் பிரித்தெடு ˙ த்துப்பார்த்திருந்தது....

வார்ப்புக்குள்ளடங்கும்
நுட்பவியலாய்த்
தோன்றிடினும்

எண்ணங்களுக்குள்
அன்பைத்தீட்டி
வண்ணங்களுக்குள்
தோயவிட்டு
நீட்சி பெறும்
வீச்சம் கொண்ட வேளை

திருத்தச்சிந்தனயில்,
அதுவல்ல இதுவே
மோட்சமென்று
சின்னச்சிறகின்
செயலுதிர்த்த காதை....

சீர்திருத்தத்தின்
எந்த வகை விமோசனம்..??

திருமலை ஷகி

நனையும் உனக்கு
குடையாக
நேற்று பெய்த மழையில்
நேற்றே முளைத்தது காளான்.

--- வினோத்குமார் பா

தேடல்
----------

முதலில்
கனவுகளில்தான்
சொற்களைத் தேடினேன்..

பின்...
எல்லா திசைகளிலும்
சுவடுகளால்
எனை வரைந்தேன்

சுவாசத்தில்
வெளிச்சங்களைப்
படரவிட்டேன்

இமைமூடிய
பார்வையை
வானவில்லால்
நனைத்தேன்
குளிர்ந்தேன்
வண்ணமானேன்

நானே
மொழியாகிப்
பின்
தேடலில்
தொலைந்து போனேன்
--- ம.கனகராஜன்

அது ஓர் பயணம்
----------------------

காற்றை நிரப்பிய
இதயத்தை பிதுக்கியபடி
என்னையே நான் மறந்த பயணம்
அங்கே
நிலாக்கள் இரண்டு
அவை நீந்துபவை அல்ல
எழுந்து நடப்பவை
நீரிலும் வானிலும்

அந்தத் தெருவைக் கடந்த
துளிகளில் பிரிந்து
கொண்டிருந்தன
அவ்விரு பறவைகளும்

பெருமழையின் சாரல்
துளிர்விட்டுக் கொண்டிருந்தது
இலைகளினூடாக ஒழுகி
வழியும் இளங்கதிர்களில் கலந்தபடி

அப்பொழுதுதான்
இருவர் என்னைக் கடந்து சென்றனர்
கூரிய அலகி ˙னால்
கண்களைக் கொத்தியவாறு

--- திருமு

அவளின் மௌனம்
சந்திக்கையிலோ,
பிரிகையிலோ
எனை
முழுமையாக முத்தமிடும்
அவளின் மௌனத்திற்குள்
அடிக்கடி தொலைத்துவிடுகிறேன்
என்னை...

--- செ. செல்வமணி செந்தில்.

எங்காவது வழிந்து
நிறைந்த கனவுகளில்
உடலை மீறிய காதலைப்
புணரும் கலத்தலை
உச்சப்படுத்தும் முத்தங்கள்
ஈரமானதாயிருக்கின்றன

பால்குடிக்கும் ஓவியங்களில்
கிடக்கும்
புத்தகக் கவிதைகளை
உன் இதழில் குடிக்கிறேன்...

ஆனால் வெளிச்சத்தை
விட மங்கலான ஒளி கொண்டாடப்படுவதில்லை

மங்கலானது காதல் இல்லை
மங்கலானது ஆபாசமில்லை
ஏன் மங்கலானது உடலிலும்
இல்லை

அது ஆன்மாவின்
அதிகாலைப் பொழுதில்
இருக்கிறது...

-நஸீஹா மொய்தீன்

ஊரை எரிக்கும் தீப்பந்தங்கள்!

-----------------------------------------

இம்முறை
புலமையை எழுதி வென்றவர்
இன்று இறுதி வாய்க்கரிசியை
வாசித்து சென்றவர்
என்றுதான் தொடங்குகிறது
அக்கதை

ஏழ்மையின் அந்தப்புரமாய்
முதிர் நிலையின்
பாடல்கள் சுமந்த தெருவை
வேகமாய் கடந்து
செங்குத்தான தாழ்வாரத்தில்
உறைந்து விடுகிறது
அன்றைய பொழுது

பசியில் அழும் குழந்தைகளுக்காய்
விரிந்திருக்கும் தாய்மடியில்
ஈ மொய்க்க
புதிதாக வசிக்க வந்து
அவலாகி கிடக்கிறாள்
ஒருத்தி

அவளின்
திரட்சியான இடங்களில்
குடியேறி விடுகின்றன
விரகத்தில் அலையும்
மோன நிலைப் பார்வைகள்

சுவர்கள் பல்லிழிக்க
கழிப்பறையும் கண்காணிக்கிறது
காதுகளை தீட்டிக்கொண்டு

கட்டுக் கதைகளுக்கு
கை கால்கள் முளைக்க
அவள் பற்றிய ஊடாட்டம்
வதந் தீப் பந்தங்களுடன்
ஊரில் அலைகிறன
..............................,
இனி எரிந்து சாம்பலாக
எல்லா தகுதிகளும்
இங்கு இருக்கு!

---ரோஷான் ஏ.ஜிப்ரி

குவளையில் நிரம்பிய
நீரென வழிகிறது ஆசை
அதனைக் குடத்தினில் நிரப்பி
உன் இடையினில் அமர்த்திக் கொள்கிறாய்,
அதன் பின்பு தழும்பிச் சிதறாமல் இருக்க
முயற்சித்ததில்லை இதுவரை நான்.

--- *Pearl Sys(முத்து)*

## வண்ணத்துப்பூச்சிகளும் ஞாபகங்களும்

---

தென்றலின் கையெழுத்தெனவும்
அழகின் நகைப்பெனவும்

முதன் முறை காதலில் விழுந்த
இதயத்தின் சீரற்ற துடிப்பெனவும்

வெட்கத்தில் சிவந்த
விழிகளை மறைக்க
மேலும் படபடத்து
காட்டிக்கொடுக்கும்
பருவ இமைகளெனவும்

செக்கச்சிவந்த செம்பருத்திப்பூக்கள்
செடியோடு சேர்ந்து
சிறகடிப்பதுபோலவும்

ஒட்டிச்சிறகடிக்கும்
இந்த வண்ணத்துப்பூச்சியின்
வண்ண வண்ண சிறகுகள்
ஏனோ உன்னை ஞாபகப்படுத்திச்செல்லும்....

--- தங்கேஸ்வரன்

கடைசியாக
நாம் முத்தமிட்டுக்கொண்டது
இரண்டு வருடத்திற்கு முந்தைய
திருவிழாவின்
கடைசி நாளில்தான்.

கள்ளிச் செடியில்
நெருஞ்சி முள்ளால்
நாம் வரைந்த
வெற்றிலை வடிவ இதயத்துக்குள்
அனாதையாய் கிடக்கிறது நம்பெயர்கள்.

அந்தப்பக்காமாய்
எப்போது போனாலும்
அழைக்கிறது என்னை.

அழைக்கிறதா உன்னையும்.
உன் கணவனுடன்
குழந்தையை இடுப்பில் சுமந்து
அந்தப்பக்காமாக
நீ தாய்வீடு செல்லும்போது.

--- நெகிழன்

கிராமத்துத் திண்ணை
-----------------------------

அன்று அந்த முற்றத்தோடு
தொட்டுக்கொண்ட கற்திண்ணையில்
கலாதியாயொரு கூட்டம்...

அம்மா, அப்பா...
தாத்தா, பாட்டி...
மாமா, மாமி...
இன்னும் நீண்டது அந்தகூட்டம்...

அவர்களின் நடுவே
அங்காங்கே அலையும்
வெற்றிலைப் பெட்டிக்கு
பெரும் மதிப்புண்டு...

இடையிடையே வாக்குவாதம்
அதற்கிடையிலொரு பெருஞ்சிரிப்பு
கண்டதும் கேட்டதுமாய்
நானும் ஆங்காங்கே
அலைந்து கொள்வேன்...

கூட்டத்தோடு நான் சேர்வதுவோ
மாமி கொண்டுவரும்
நிலக்கடலைப் பொரியலுக்காகத்தான்...
இற்றைவரை காணாத ருசியது.

குடும்பத்தில் தொடங்கி
அரசியலுக்கு இடம்மாறும்
அளவளாவிய கதைகள்...
அத்தனையிலும் படிப்பினைகளே...

சிலதே நாட்களில்
அக்காவின் திருமணம் தலைதூக்க
தரைமட்டமானது அந்தத்திண்ணை...

பாவம் என்ன நினைத்திருக்கும்..?
தன்னோடு மனிதம் உறவாடிய இடங்கள்
மகிழுர்ந்தின் புகலிடமானதை
மனம் பொறுக்குமா..?

அதன் நினைவுகள் எவ்வாறோ....

என் சிந்தைகள்தான்
அதன் இன்பம் நோக்கி
இன்னமும் விரைகின்றது...

-ஸிக்ரா ஹாதி-

நீயும் உன் காதலும்
-------------------------

பிறழ்ந்து போன ரூபிக் க்யூபின்
வண்ணங்கள் கலைந்த
பக்கங்களென
கிடந்தது என் மனது.
அடுக்கடுக்காய் வண்ணங்களை
ஒன்றிணைக்கும் வித்தையை
அறிந்திருந்தது உன் காதல்.
அந்த கர்வத்திலேயேதான்
மீண்டும் மீண்டும்
கலைத்துச் சேர்த்து என்னை அலைக்கழிக்கிறாய் நீ!

--- சுரேஷ் பரதன்.

என் கவிதைகள்
அகோர பசியோடே
ஜனிக்கின்றன

என்
சிற்றுண்டிச் சாலையின்
நொறுக்கு தீனிகளில்
அவைகளின்
அசுர பசி
அதிகரித்தே விடுகின்றது

எங்கும்
பசியடங்கா நிலை
என்னையே
தின்றுவிடுமோ.....?

ஐயம் அவ்வப்போது

கடும்
நீர்ச் சுழலில்
கழுத்தை இறுக்கும் மகளை
விலக்க இயலா
தவிக்கும்
நேச தகப்பனாய்.....நான்

நேசிப்பதும்
நிகழ்வதும்
நேரெதிராகுமெனில்......

மின் கம்பமாய்
நிற்கின்ற போது
வாழ்வுத் தொடரி
பார்வை தாண்டி
பயணித்து விடுகிறது..........!

--- சட்டாம்பிள்ளை

உண்மையின் தெருவில்
ஊர்க்கோலம் போகின்றன
பேசிய உண்மைகளும்
பேசாத உண்மைகளும்;
பேசிய உண்மைகளுக்கு
சவுக்கடியும்;
பேசாத உண்மைகளுக்கு
மலர்க்கீரிடமும் பரிசளிக்கப்படுகின்றன
சத்தியத்தின் பாதையில்!

-ந.சுரேஷ், ஈரோடு

மூடிய முகிலுள் மோகன நிலவாய்
****முத்தென ஒளிரும் மோகினி இவளோ ?
சூடிய மலரும் சொக்கிட வைக்கும்
****சுந்தர வதனத் தோகையின் சிரிப்போ ?
பாடிடும் குயில்போல் பாவையின் குரலும்
****பைந்தமிழ்ச் சுவையாய்ப் பரவிடும் மதுவோ ?
ஆடிடும் மயிலாய் அபிநயம் புரியும்
****ஆயிழை அழகில் அசைந்திடும் மனமே !
வளைகரம் கொஞ்ச வஞ்சியும் சிணுங்க
****வளைவுகள் வனப்பாய் வதைத்திடும் இடையோ ?
முளைவிடும் குருத்தாய் முந்திரி விதையாய்
****முகத்தினில் எடுப்பாய் முகிழ்ந்திடும் மூக்கோ ?
இளைஞரை யீர்க்கும் இமைத்திடும் விழியும்
****இதழ்களின் சிவப்பும் இளமையின் துடிப்போ ?
விளைந்தநெற் கதிராய் வெண்மணி யாரம்
****மின்னிடும் பெண்ணை விரும்பிடும் உளமே !

--- சியாமளா ராஜசேகர்

தீபாவளிப் பண்டிகை
எல்லோரும் கொண்டாடுவார்கள்
அதிகாலை விழித்தெழுந்து
எண்ணெய் தேய்த்து வெந்நீரில்
தலைமுழுகிக் குளிப்பார்கள்
மகிழ்ச்சியோடு புத்தாடையுடுத்தி
மத்தாப்பூ கொளுத்துவார்கள்
பலகாரம் உண்பார்கள்
பட்டாசு வெடிப்பார்கள்
மசால்வடை மெதுவடை
கறிசோறு சமைத்துண்பார்கள்
மகிழ்வுந்திலோ பேருந்திலோ
மோட்டார் சைக்கிளிலோ
புதுத் திரைப்படம் பார்க்க
பட்டினத்துக்குப் போய்வருவார்கள்
உறவினர்கள் நண்பர்கள்
அக்கம்பக்கத்தினர் அனைவரும்
வீடுகளுக்கு வந்துபோவார்கள்
மாலைமுதல் காலைவரை
வானவேடிக்கை புஸ்வானம்
வானில் வர்ணஜாலங்களில்
பூமழைதூவும் மகிழ்ச்சியில்
உள்ளங்கள் நனைந்திடக்கூடும்
வாசலில் சங்குசக்கரங்கள்
வண்ணவண்ணக் கோலமிடும்....
வீதியோரங்களில்
சாக்கடைத் துர்நாற்றம் கமழும்
எங்கள் வீடுகளில்
வானக்கூரை ஒழுகலில்
எங்கள் தேகங்கள்
நனைந்து நடுங்கக்கூடும்
ஏழைசாதி
எம் மக்கள் வயிறுகளில்
பசியெனும் பெருநெருப்பு
பற்றியெரியக்கூடும்
கந்தல் தரித்தவர் தேகங்கள்
அழுக்காடைகள் களைந்து
அழகிய புத்தாடையுடுத்த ஏங்கும்
தீப ஒளிவீசும்
பணம் படைத்தோரில்லங்களில்
கனவு வாழ்க்கைக்காய்
கையேந்தி நிற்போம்
நாளைய மனிதர் நாங்கள்
"சோறு போடுங்க சாமி
பசி கொல்லுது"!.....

--- அன்வர் மில்டன்

அப்பாவின்
துளைகள் விழுந்த
பனியனில்தான்
எனது சிறுவயது
வானம் விரிந்தது...

--- ஜி ராஜன்

கதைகளைப் போர்த்தி
உறங்க வைத்த அம்மா
உறங்கியதே இல்லை
கனவிலும்...

சொல்லியக் கதைகளில்
இடைச்செருகலாய்
இருக்கக் கூடும்
இரண்டாந் தாரமாய்
வாழவந்த கதை.

நல்ல தங்காளாய்
எங்களை கிணற்றில்
போட்டுவிட்டுப் போனவள்
வரவே இல்லை.

--- *P.K. சாமி*

ஒரே ஒரு யூதாஸ்
இயேசுபிரானுக்கு
ஊரெங்கும் யூதாஸ்கள்
இப்போது ..

நல்ல வேளை
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு
பின் பிறக்கவில்லை
இயேசுபிரான் ..

பிறந்திருந்தால்
ஏரோதுகளால்
குழந்தை யேசுவாகவே
மரித்திருப்பார் !

--- கருணாநிதி ஷண்முகம்

இறக்கைகள் காற்றில் எரிவதாய்
சில நேரங்களில் உணர்ந்திருக்கக்
கூடும்...
யாரோ ஏற்றி வைத்த வெக்கை தீயில்
உருகி உடலில் ஊறும் மெழுகுகளாய்
ஊர்ந்திருந்தன அவற்றின்
வியர்வைகள்...
பசியில் வாடும்
சிறுவனின் துடுப்பசைப்பாய்
அசைந்திருந்தன அவற்றின்
சிறகுகள்...
தாகங்களின் தேக்கங்கள்..
கரகரக்கும் குரலசைப்பு..
ஏக்கங்கள் சுமந்து பறந்திருந்தன...
அப்பாலை வெளியும்..
வாழ்வின் வெளியும்..
வெற்றிடமாய் தெரிந்தது அவற்றிற்கு...
இளைப்பாற மரமும்
இறக்கை சாய கிளையும்
குரல் நனைக்க நீருமற்ற
கானல் நீர் வரப்பது...
கால் வைக்கும் இடங்களில்
வெம்மை வழிந்திருந்தது...
வசந்தங்களின் வருகையை
எதிர்நோக்கி காத்திருக்கும் கோடையை
தாமே சுழற்றுவதாய் நினைத்து
பறந்திருந்தன..
அவை தம் பாதை வழியே
நம்பிக்கையின் இறகுகளை
உதிர்த்துப் போயிருந்தன என்
வாசலில்...

---வித்யா

நாளொன்னுக்கு நூறு சேதி
நாகரீக மோகமதில் குறுஞ்சேதி

கொஞ்சம் புரட்டி பார்ப்போமா
அந்தா வாராளே சிறு கிழவி

கடுதாசி எழுத சொல்லி
கால் நடையா வாராளே

சுருக்குப் பையில் வெத்தலைங்க
சுருள் பாக்கு மணம் சுண்டுதுங்க

கூன் சுமக்கும் கிழவிக்குள்ள
குறை நிறைகள் எத்தனையோ

வாசப்படி ஏறி வசமொழி கூட்டுறாளே
எங்காத்தா தண்ணி மோந்து தொண்டைய
அடைக்கிறாளே

ஒரு கண்ணுக்கு அழுது தீர்த்து
மஞ்சப் பைக்குள்ள கடுதாசி தேடுறாளே

சின்ன மகளுக்கு எழுதிடியம்மானு
கால நீட்டி நாலா மடிக்கிறா வெத்தலைய

கருப்பன் துணையினு போடு தாயி
நல்ல நாளுக்கு வாவென்று சேதி சொல்லுறாளே

மூத்தவ வந்து போனாளா
நாளுக் கணக்க மறந்திடாதே

முந்தாணையில் மூக்க சிந்தி
மறு சேதி சொல்லுறாளே

சூதானம பொழைக்கனும்னு
புலம்பல நீட்டுறாளே
விலாசம் எழுத மகளின் கடுதாசியை தேடுறாளே

சேதி போய் வர காலமாகும்
காத்தே கண்ணும் பூத்து போகும்

அந்த சுகம் இப்ப வருமா
வெத்தலை இடிக்க திண்ணை வருமா?

--- மஹா பர்வின்

உனக்கும் எனக்குமான
நிகழ்கால தூரம்
சற்றே அதிகமாய்
இருப்பினும்...

அதை முழுமையாய்
நிறைத்து
நம்மை இணைத்துள்ளது
நம் எதிர்காலம்...!!

--- தப்தி

சீரான தரையிலும்
சிதறியே விழும் புள்ளிகள்,
புள்ளிகளை அணைக்க மறந்து
தனிவழி செல்லும் கம்பிகள்,
சாணத்தில்
சரிவர அமராத பூசணிப் பூ ;
இப்படி,
ஒழுங்கற்றே கண்களில் விழும்,
அம்மா இடும் கோலங்கள் ..

சீரில்லா தரையிலும்
சிறப்பாக விழும் புள்ளிகள்,
புள்ளிகளை
கச்சிதமாக அணைத்துச் செல்லும் கம்பிகள்,
கம்பிகளை
அழகே நிரம்பிச் செல்லும் வர்ணங்கள் ;
இப்படி,
காணாக் கண்களையும்,
தன்வசம் சுண்டி இழுக்கும்,
மனைவி இடும் கோலங்கள் ..

மனைவி இடும்
சுண்ணாம்புக் கோலங்கள்,
மறுநாள் காலைவரை அழிவதில்லை,
காற்றும் அவற்றை,
கரைக்க முயல்வதில்லை ..
இட்டபடி அழகே,
இட்ட இடத்தில இருக்கும் ;
மறுநாள் அவள் ,
வாசல் தெளித்து கலைக்கும்வரை !

அம்மா இடும்
மாக்கோலங்கள்,
அந்திசாயும் நேரம் வரைகூட
தாக்குபிடிப்பதில்லை,
எறும்பும், விட்டிலும்,
கோழியும், குருவியும்,
கொத்தியே கரைத்து விடுகின்றன ;
காற்றும்
கொஞ்சம் பருகித் தேறும் !

--- பா. கற்குவேல்

தவறுதலாய் தடுக்கியதில்
அடுத்த அடியை
எடுத்து வைப்பதற்கான
கடவுச் சொல் பறிபோனது..!!

தொலைத்தேனா – மறந்தேனா
என்கிற ஆய்வுகளின்
இடியாப்ப சிக்கல்களில்
கரைந்து தொலைகிறது
நிகழ்காலத்து வாய்ப்புகள்..!!

தொடர்வதா –
தொலைந்ததை மீட்பதா
என்கிற யோசிப்புகளை
சோம்பல்கள் என்பதாய்
குறிப்பெழுதி கடக்கிறார்கள்
தலைகீழ் உலகத்து மனிதர்கள்..!
--- அப்பாஸ் அல் அஸாதி

பின்னிரவுகளில் உடலூறும் கம்பளிப் பூச்சிகள்

-----------------------------------------------

என் ஈரக்கூந்தலிலிருந்து
உதிர்ந்த நீர்த்துளிகள்
அதுவரையில் என் உடலெங்கும்
வெற்று வியர்வையைத் தந்த
அனலை விரட்டிக் கொண்டிருந்தன.

மல்லிகைப் பூ
என் கூந்தல் ஏறியதும்
விரகதாபத்தின் சிற்றிழைகள்
என்னை நெய்யத் துவங்கின.

கட்டில் விரிப்பின்
சிறு சிறு கசங்கலையும்
இப்போதல்ல
இனிமேல்தான் என்று சொல்லி
சரிசெய்தபோது
என் வெட்கப் புன்னகையே என்னைக்
கொஞ்சமாய்த் தின்று பார்த்தது.

சாளரத் திரைச்சீலைகள்
அறையின் விளக்குகள்
கதவுகளின் தாழ்ப்பாள்கள் என
நான் சோதனை செய்ததில்
அவையனைத்தும் அந்நேரத்தில்
எனக்கு ஒத்துழைக்கத் தயாராகவே இருந்தன.

குவளையில் ததும்பும் பாலின்
நுரைகளெல்லாம் நீர்த்து
முதல் நிலையில் ஆடைகள்
பாலிலும் என்னிலும் இறுக்கத் துவங்கியது.

கதவுகள் திறக்கப்படுமென்ற
எதிர்பார்ப்பின் அதீத களைப்பில்,
நான் தூக்கிப்போன பின்னிரவில்
மண்ணூறும் கம்பளிப்பூச்சியாக
அவன் என் உடலெங்கும் ஊர்ந்து திரிந்ததை
அதிகாலை உடல் அசதியில் தான்
முழுவதுமாய் உணர்ந்தேன்
நான்.

--- ஆண்டன் பெனி

திங்களை முகத்தில் வைத்து
----திரள் முகில் சடையில் வைத்து
தங்கத்தை நிறத்தில் சேர்த்து
----தளிர்க் கொடி இடையை நட்டு

சங்கெனக் கழுத்தை வார்த்து
----சாய்த்திடும் உதடு தைத்து
கொங்கையில் செழுமை வைத்து
---- கூர் விழியிலே அம்பை வைத்து

பொங்கிடும் அழகையெல்லாம்
----பொலிவுறப் படைத்து விட்டு
அங்கிருந்தனுப்பி வைத்த
----அந்தப் பிரம்மனின் சிற்பம் நீயோ

--- பதஞ்சலி வாதாவூரர்

மொட்டை மாடி

--------------------

சூரியப் பிரவேசத்தில்
சுகமான காலை தருகிறது தினமும்
இந்தப் பத்துக்குப் பத்து அறை
இறுக்கமற்ற சன்னல் கம்பிகளின்
இடைவெளி வழியே

புவனாவின்
புன்னகைக் காபியில்
புலரும் விடியல்
பூரணமாகவே தருகிறது ஒவ்வொரு
பொழுதையுமே

அன்றைய தேவைக்கான
அனைத்துக் காய்களை நறுக்கவும்
அடுப்பில் சமைத்திறக்கவும்
அன்னை தந்தை பிள்ளைகள்
அமர்ந்து உண்டு ரசிக்க
அது சமையற்கூடம் அல்ல
அழகிய கலைக்கூடம்

விமலனும் தாமரையும்
விளையாடிக் களிக்கவும்
வீட்டுப் பாடம் பயிலவும்
வாய்விட்டுச் சிரித்துப் பேசி மகிழ்ந்து
எல்லோரும் சாற்றே தொலைக்காட்சிமுன்
ஏக மனதாய்ப் பொழுது கழிக்கவும்
எழிலாகவே இருக்கிறது
எங்கள் வீட்டுக் கூடம்

விருந்தினரை உபசரிக்க
வேறுமை சூழ் இரவுகளில்
விளக்கொளியில் கதைகள்
படிக்கவென வெளியாறை
விசாலமாகவே இருக்கிறது

இப்போதும் அப்படியே
இங்கே குழல் விளக்கொளியில்
படித்துக் கொண்டிருக்கிறேன்
பற்றறுத்த பட்டினத்தார்
கதையொன்றை

வெளியே சிலரின் பேச்சுக்கு குரல்...
வேறொன்றுமில்லை
வெள்ளையடித்து ஈரமாய் நின்ற
அந்த எதிர்த்த வீட்டில்
நாளை கிரகப்பிரவேசமாம்

அது சரி ஏன் இன்னும்
நம் வீட்டு மேல் தளம்
மொட்டை மாடியாகவே
இருக்கிறது...

பட்டினத்தாரைப்
படித்துக் கொண்டிருந்த நான்
இருந்த இடம் விட்டெழுந்து
அருந்தத் தண்ணீர் தேடுகிறேன்...

தாகம் என்னை மெல்ல
இருட்டுக்குள் பிரவேசிக்கச் செய்கிறது...

--- மீ.மணிகண்டன்

*சின்றில்லாவின் வகுப்பறை*
*----------------------------------------------*

*வீடு திரும்பியதும்*
*தன் வகுப்பறைக்குள் சென்று*
*கதவடைத்துக் கொள்கிறாள்*
*சின்றில்லா!*
*குட்டி உலகமொன்று*
*வெளிச்சத்தோடு விரிகிறது!*
*இல்லாத மூக்குக்கண்ணாடியை சரிசெய்தபடி*
*விதுலா மிஸ்ஸின் மிடுக்கோடு*
*பாடம் நடத்தத் தொடங்குகிறாள்!*
*வகுப்பில்*
*பூனைக்குட்டியும்*
*சில தேவதைகளும் படிக்கிறார்கள்!*
*சுற்றுச்சுவர் நான்கும்*
*சித்திர எழுத்துக்களால்*
*நிறைகின்றன!*
*பதில் சொல்லாத தேவதைக்கு*
*ஒரு பென்சிலை பரிசளித்து*
*இது அடுத்தமுறை*
*நீ சொல்லப்போகும்*
*சரியான பதிலுக்கு என்கிறாள்.*
*கணக்கு புரியாத*
*பூனைக்குட்டியை*
*செல்லமாய்த் தட்டி*
*நாளைக்கு*
*உங்க அம்மாவை கூட்டிவா என்கிறாள்.*
*தலையில் தானே குட்டிக்கொண்டு*
*வாய்ப்பாட்டை*
*மனப்பாடம் செய்யும்*
*இன்னொரு தேவதையை அழைத்து*
*தனது இசைக்கேற்ப*
*ஏழாம் வாய்ப்பாட்டைப் பாடச்சொல்கிறாள்.*
*இசையாய் பரவுகிறது*
*ஏழாம் வாய்ப்பாடு!*
*சூரியமண்டலத்தை*
*மடியில் பரப்பி*
*ஆளுக்கு கொஞ்சம்*
*நட்சத்திரங்களை*
*அள்ளிக்கொள்ளச் சொல்கிறாள்.*
*பானிபட்டுப் போரில்*
*இரத்தவாடை வீசுமென்று*
*வெள்ளைப் புறாவோன்றின் கதையை சொல்லத் தொடங்குகிறாள்.*
*அழகான ஓவியத்திலிருந்து*
*வண்ணங்களை அள்ளி*
*தேவதைகளின் வெள்ளுடைகளில் பூசிவிட்டு*
*கன்னம் குழிவிழ சிரிக்கிறாள்!*
*வகுப்பு முடிவுக்கு வருகிறது.*
*தேர்வு அறிவிப்புக்கு*
*காதுதீட்டி காத்திருக்கிறார்கள்*
*தேவதைகள்.*
*இனி தேர்வுகளே கிடையாதென்று அறிவித்துவிட்டு*
*குதூகலதத்தை கண்களில் நிரப்பிக்கொண்டு*
*அறையைத் திறக்கிறாள்*
*என் சின்றில்லா.*
*எழுதப் படாத வீட்டுப்பாடங்களை*
*நான் எப்படி நினைவூட்டுவது?*
*-- குறிஞ்சி நாடன்.*

## தாராளமாக வாழ்த்தலாம்

----------------------------------

வேரறுக்காத களைகளைக் காணாது
வேகவேகமாக முன்னேறி
அந்தரத்தில் நிற்கிறோமென்றும்
ஆகாயமாய் பெருமித்து
இதோ அவள் வளர்ந்துவிட்டாலேனவும்
குனிந்து சொல்லிக்கொள்ளுங்கள்.
இல்லை எக்கி பார்த்துச் சொல்லுங்கள்
அவள் அதே மறைவில்தான் இருப்பாள்.
அதே அளவெடுத்த உயரத்தில்தான்
கட்டமைக்கப்பட்டிருப்பாள்.
நீங்கள் நல்லதென இட்டாலும்
எப்படியோ அத்தனை பள்ளத்தையும்
தாண்டத்தான் செய்கிறாள்.
சிலவற்றில் தன்னை நிரப்பிக் கொண்டு
பின்னவளுக்கு வழி செய்கிறாள்.
உங்கள் ஒப்பீடுகளின் உண்மைக்கு
அவள் தன்னை வேகபடுத்தியிருக்க
நீங்களும் உதடுகளால் போற்றியபடியே
விரல்களால் குழி அமைக்க நவீனப்படுகிறீர்.
இருக்கட்டும், அவள் தன்னை அதிர்த்து
ஆழிச்சுழலாய் விரியலாவாள்.
எப்போதும் போல நிஜமாக நீங்கள்
தாராளமாக வாழ்த்தலாம்
உங்கள் தோள்களை உயர்த்தி.

- முருகன்.சுந்தரபாண்டியன்

அந்த
மலையுச்சியின் சிறகுகளில்
இன்னமும் கிடக்கிறது
யாரோ ஒருவருக்காய்
கைகாட்டி மரமொன்று.

தீட்சண்யம் துறந்து நிற்கும்
எல்லாச் சூரியன் மடியிலும்
எண்ணிப் பார்
ஏராளம் நிலாக்கள்.

எச்சிலிட்டுக் கட்டிய
சிலந்திக்குத் தெரியும்
முகமற்றிருப்பினும்
அதன் எல்லா செல்திசையும்
இன்னும் பிறவும்.

நெகிழாதவைகளை
தகர்த்துச் செல்வதையன்றி
வானத்தின் கிழிதிசைகளில்
அப்படியொன்றும் புதியதாய்
தெரிவதேயில்லை
எந்த ஒரு பிரளயமும்.

முணுமுணுத்துச் செல்லும்
தும்பியின் கால்களில்
ஒட்டியிருக்கிறது
ஏதோ ஒரு பெயரறியா மரத்தின்
பிறப்பிற்கான மகரந்தம்.

--- சுதந்திரன்

நான் கொலை செய்ததற்காய்
எனக்கு மரண தண்டனை.
என்னைக் கொல்ல வருபவனுக்கு
என்ன தண்டனை?

நீதிக்குக் கட்டுப்படும் மனிதன்
மனுநீதி என்றால் என்ன?
என்று கேட்கிறான்.

நீதிக்கு முன்
பொய்களுக்குத் தட்டுப்பாடு.

சாதிக்கு முன்
சமவுரிமைத் தட்டுப்பாடு.

நேரத்திற்கு முன்
பாசத்திற்குத் தட்டுப்பாடு.

காற்றுக்குக் கூட
சுதந்திரத் தட்டுப்பாடு.

தேசம் ஆண்ட
காலணித்துவ சர்வாதிகார கட்டுப்பாடு
தேசம் கடந்து
சாதிக்கும் தன் தந்திரத் திட்டத்தோடு.

சுதந்திரம் வென்று நாம்
சாதித்தது என்னென்ன?
சட்டத்தின் அதீதத்தால்
அடிமைகளாவதன் அர்த்தமென்ன?

காற்றுக்குச் சட்டம் ஒன்று
நிச்சயம் வரைய வேண்டும்.
கடல் கரை தாண்டினால்
கட்டிக் கூண்டில் போடவேண்டும்
என்று சொல்லும் மடையர்களைக்
கல்லடித்துக் கொல்லவேண்டும்
என்று சொல்லும் நீதியின்
தண்டனையும் ஒரு குற்றமே...!

நான்
எழுதிய கவிதை
சிறையில் வாசிக்கப்பட்டது.

--- நிஸ்பான்_ஹம்ஸா

அம்மா வீட்டில் மகளிடம்
'நா உன்னப்போல குட்டியா
இருக்கப்ப இங்க பெரிய மாமரம்
ஒண்ணு இருந்துது'..
எனும்போது அதே பால்யத்தின்
உருட்டும் விழிகளை
விரித்து பார்க்கிறேன்...

'அங்கதான் எல்லாரும் ஊஞ்சல்கட்டி
விளையாடுவோம்' எனும்போது
சிரிப்பொலிகளுக்கிடையே
வானம் தொட்டு வருகிறேன்.....

பிறகு,
ஒரு பெரிய பெருமுச்சோடு
விழிகளை திருப்பி கொள்கிறேன்
அம்மரத்தின் மேலிருந்து...

--- உமா செந்தில்..

சில நாற்றங்கள் காற்றின் காலணிந்து
காதங்கள் கடந்து வந்து
சுவாசப் பாதைகளில் ஓய்வெடுக்கின்றன..

ஓய்வில் நீளும் கால்கள் சமயங்களில்
வாய் வழிச் சாக்கடையில் பதிவதால்
நாசிவழியெங்கும் துர் நாற்றச் சுவடுகள்
தங்கிவிடுகின்றன..

இப்பூமிக் காற்றின் கால் இறக்கைகள்
கதண்டுகளாய் மொய்த்தபடி
சுவாசப் பையின் மாடப்பிறைகளில்
ரசயானத் தேன் சேமிக்கின்றன..

இருமல் சத்தங்கள் கதண்டுகளின்
கைக்காட்டிகள்..

கழிப்பறைகளின் குப்பைகளின்
தேங்கிய குட்டைகளின் பல்கலைக்கழகப்
பட்டம் பெற்ற நீச்ச வீச்சங்கள்
நாசிவழியறிந்து உள் நுழையும் போதுகளில்

விரல் கதவும் உள்ளங்கை அடைப்பானும்
கைக்குட்டையின் தானியங்கி
இயந்திர மூடலும்
சுவாசப் பாதையை அடைக்கும்
சுக்ரீவனாக உருமாறும்..

உள்ளிருந்து வெளிவரும் ஆக்ரோஷ
வாலிவாயு
கோழைகளையும் வீழ்த்தி
வெளிக் கொணரும் வரசக்தியுடையது..

ஆனால்..
பிராணவாசம் வெளியேறிய
சுவாசப் பாதையை மூட
வெறும் பஞ்சு உருண்டைகளே போதுமானதாகிறது..

தன் பிணவாடைக் கால்கள்
தன்சுவாசப் பாதைகளில்
ஒருபோதும் நடந்ததேயில்லை....

--- ராகவபிரியன்

நிலாக்களும்_நாங்களும்
-------------------------------

பசித்த வயிறோடும்,
பாதி தட்டுச் சோறோடும் அமர்கிறோம்..

குடிசைக்குள் கை நீட்டும்
நிலாக்களை நாங்கள் கண்டுகொள்வதில்லை,

எங்கள் எலும்பில் தெரியும்
வறுமையின் வரைபடத்தை
நிலாக்களும் கண்டுகொள்வதில்லை...

--- கார்த்திக் முருகானந்தம்.

தீர்க்கவியலா நோயின் ஒற்றைக் குரைப்பொலி
--------------------------------------------------------

கைகளை இறுகப்பற்றி
மெலிதாய் நீவி
ஒன்றுமில்லை பயப்படும்படி எனவும்.,
கண்கள் மூடி பிதற்றும்
வார்த்தைகளை அருகமர்ந்து
அணைப்பதே போலச் செய்து
உம் ' காரத்தை அதிகப்படியாய்
செவிகளில் படும்படி ஒலிக்க செய வேண்டும்.,
வேண்டுமெனில் ஆடைகளைத் தளர்த்தி
வியர்வை துளிர்க்கும் இடங்களை
குறிவைத்து பனை மட்டை விசிறியால்
ஆசுவாசப்படுத்தலாம்...
கண்டிப்பாக மின் விசிறி பயன்படுத்துதல்
தவிர்க்கப்படுகிறது..,
உங்களது அன்புக்குகந்தவர் எனில்
சில நிமிடங்கள் அணைத்தபடி உடன்
படுத்திருப்பது சாலச் சிறந்தது...
விடுபட்டு எழுந்து 'உனது நோய்மை
என்னையும் கபளீகரம் செய்து விட்டது பார்' என
நம்மை தொட்டுப் பார்த்து
உறுதி செய்து கொள்ளச் செய்யலாம்..,
படுக்கையிலிருந்து எழ முயற்சித்து
தளர்ந்து கீழே விழ நேர்ந்தால்
கரம் நீட்டி உறுதியான விரலில்
ஏதோ ஒன்றை நீட்டி பிடித்தெழும்ப வைத்து
காதோரம் ' உனது வெளிறிய உதடையும்;
நடுங்கும் கால்களையும் ,
பஞ்சடைத்த செவிகளையும்,
குழைந்த நீர் சேர்ந்த விழிகளையும் நான் முன்பு
பெற்றிருந்தேன்,
இப்போது கனவு போல் எனக்கு தெரிவது
போல் நீயும் விரைவில் தெளிவாய்'
என்று தெளிவாய் சொல்லி விடலாம்..,
மருந்தெனக் கொள்வது
மனம் எனும் நாணல்
சூறைக்கு வளைந்து தருதலாம்.

--- ஹேமா _ வேதா நாயக்

நள்ளிரவில் ஓங்கார ஒலியொன்று
செவியில் புகுந்து உறக்கம் கலைத்தது
உலகம்
இடம்வலமாய் கீழ்மேலாய்
லயமற்று சுற்றிச் சுழன்றது
பிரபஞ்சப் பேரொளி
கூரையைத் துளைத்து
மின்னல் கீற்றென மடிந்து பாய்ந்து
விழிகளுக்குள் இறங்கி
தேகம் நிறைத்தது
பெருஞ்சக்திக் கனலெழுந்து
அடர்த்தி அதிகமாகிப் பொங்கிப் பரவியது
கணநேரத்தில்
நினைவுகளின் வீச்சு
சக்தியைப் பொருளாக்கி
பேரண்டங்களை சிருஷ்டித்துப் போனது
ஆனந்தத்தின் உச்சபட்ச அதிர்வு
நரம்புகளை மீட்டி நர்த்தனம் செய்தது
உருவம் மறைந்து
விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைவெளியின்றி
நிறைந்தது பிரக்ஞை
சுயம்
அடைவதற்கு எதுவுமின்றி
பற்றிப் படர்ந்து யாதுமாகி நின்றது

--மதிபாலன்

எனக்குத் தெரியும்
இன்னும் சிறிது நேரத்தில்
கொல்லப்பட்டு விடுவேன் என

கிழிந்த நாராய் தரையில் கிடக்கிறேன்
நிர்வாணமாய்

எத்தனை பேர் என தெரியவில்லை...
பல மிருகங்களின்
பலாத்கார புணர்வுக்கு பின்னும்
உயிருடன் கிடக்கிறேன்

என் முகத்தில் காறி உமிழ்கிறான்
ஒருவன்..
என் பிறப்புறுப்பை பூட்ஸ் காலால்
மிதிக்கிறான் ஒருவன்..
'அம்மா'வென அலற வாயில்
உதைக்கிறான் இன்னொருவன்..

என் மொழியினையே சிதைத்து விட்டதாய்
அசிங்கமாய் சிரிக்கின்றான் அவன்

ஒரு இனத்திற்கான வேதனை அனைத்தையும்
ஒருத்திமீது சுமத்திய வெற்றிக் களிப்புடன்
நடனமாடுகின்றனர் என்னைச் சுற்றி

அரை மணிநேரத்தில் அனைத்தும்
அழிக்கப்பட்டும் அழவில்லை நான்..

மலத்தினை மிதித்துவிட்ட
அருவெறுப்பு மட்டுமே எஞ்சியிருக்கிறது

அற்ப புழுக்களென
புறக்கணித்து சென்றுவிட

என்னால் முடியும்

மிகுதி நாட்களையும்
வாழ்ந்து முடித்துவிட
எனக்குத் தெரியும்

ஆனாலும்
சிறிது நேரத்தில்
நான் கொல்லப்பட்டு விடுவேன்

என் உயிருறுப்பை உருக்குலைத்த
அவர்களுக்கு என்னை உயிருடன் விடும்
தைரியம் மட்டும் இல்லேவே இல்லை

--- சசி சிவதாசன்

அறையில் நுழைகிறது
ஆதரவற்ற காற்று
தொலைவில் அசைகிறது
தென்னங்கீற்று

ஆசையோடு அசைபோட்டேன்
நெஞ்சிடுக்கில்
பழைய நினைவுகள்

வெற்றிக்கு பலியாய்
சில பல
தோல்விகள்

மின்வெட்டு நாளில்
அழைப்பு மணியாய்
கரைகிறது காக்கை

--- விஜி

கதவுகளுக்கு இடையில்...
---------------------------------------

பண்டிகை நாட்களிலெல்லாம்
கதவுகளைக் கழுவி
பூவுடன் பொட்டுவைப்பது
அம்மாவுக்குப் பிடிக்கும்!

அப்பாவுக்கும் கதவுக்கும்
அப்படியொரு பந்தம்!
அவர் திறக்கும் அழகே
அவர் வரவைச் சொல்லிவிடும்!

மச்சு வீட்டின் நிலைப்படி
சிறிதாகவே இருக்கும்.
மன்னர் வந்தாலும்
குனிந்துதான் நுழைய வேண்டும்
இருந்தாலும்
கூன் விழுந்த பாட்டிக்கு
அந்தக் கவலையில்லை!

வேகமாக வளர வேண்டுமென
வருகையிலும் போகையிலும்
கதவைப் பிடித்து தொங்குவது
அண்ணனின் வழக்கம்!

கதவில் ஏறி ஆடுவது மட்டுமே
என் விளையாட்டு.
துருப்பிடித்த காரணத்தால் வரும்
'க்ரீச்... க்ரீச்...' சத்தம் கேட்டு
ஓடிவரும் தாத்தாவுக்கு
என்னைத் துரத்துவதுதான் பொழுதுபோக்கு!

தாழ்ப்பாளைத் திருகிக்கொண்டே இருக்கும்
தங்கையால்தான் வீட்டில்
அடிக்கடி பிரச்னை வருகிறது
என்ற நம்பிக்கையும்
கதவுகளுக்கிடையே இருந்தது!

இப்போதும் கதவு திறக்கிற சத்தம்
கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது.
'இந்த நேரத்தில்
எந்தக் கதவு திறக்கிறது' என்று
நானும் விழித்துவிடுகிறேன்!

--- மனோ ரெட்

மேலிருந்து கீழே
விழுகிறாய்......
ஏனோ அது தான்
விதைகள் மரமாய்
எழுவதற்கான வரமாய் இருக்கிறது
மழையே !
இடைவிடாமல் விழும்
துளிகளானதால் பொழிகிறாய்....
அதனால் தானோ நீ
தூய்மையின் மொழியாகிறாய்....
--- து.ரம்யா

நானும் எனது ஆட்டுக்குட்டியும்
-----------------------------------------

அந்தொரு நாளில் அதிசயம் தான்
அழகாய் உருவில் என் வீட்டில்
ஆடும் மயிலின் அழகினை போல்
அழகாய் துள்ளும் ஆட்டுக்குட்டி

வீட்டில் இருக்கும் வெள்ளாடு
வேதனையுடனே ஈன்றதுவாம்
வெகுமதியான பரிசெனக்காய்
வெள்ளை பஞ்சு ஆட்டுக்குட்டி

பள்ளி முடித்து வீடுவரும் —என்
பார்வை முழுக்க அதன்மேலே
பார்த்து ரசிப்பேன் பரவசமாய்
பள்ளியில் இருப்பேன் அதன்நினைவாய்

கழுத்து மணியின் ஓசையுடன்
காலடிக் குளம்பின் சத்தத்துடன்
துள்ளி குதித்தே ஓடிவரும்-என்
துருதுருவான ஆட்டுக்குட்டி

புட்டியில் பாலை நிறைத்ததற்க்கு-நான்
புகட்டி மகிழ்வேன் அனுதினமும்
முட்டி மோதி குடித்துவிடும்-என்
முகத்தில் முட்டி விளையாடும்

அடுத்த வீதிக்கு ஓடிடுவேன்
அதுவும் பின்னால் ஓடிவரும்
அன்பாய் தடவி அணைத்துக்கொள்வேன்
அன்னையைபோல் முத்தம் கொடுத்துகொள்வேன்

அந்தொரு நாளில் இடியாக
அந்த செய்தி காதில் விழ

அதிர்ந்து போனேன் நிலமாக -நான்
அடங்கி போனேன் அணுவாக

அறுபது ரூபாய் பணத்திற்கு
அடுத்தவர் வீட்டிற்கு கொடுப்பதற்கு
அப்பா விலையை பேசிவிட்டார் —என்
அழகு குட்டி ஆட்டிற்கு

பள்ளி முடித்து வீடுவந்தேன் —கண்
பார்வையை சுழற்றி நோட்டமிட்டேன்
பட்டி முழுக்க தேடிவிட்டேன்-என்
பட்டுக் குட்டியை காணவில்லை

--- கே.செந்தில்குமார்

பிழைப்புச் சிறை
------------------------------

ஊருக்கு போக முடியாத
பண்டிகை நாளில்
பக்கத்து வீட்டு இனிப்பும்
கசக்கும்.

--- இரா மதிபாலா

ஒருவேளை
என் மரணத்திற்கு
நானே போய்வர நேர்ந்தால்............
அவன் மண்பானையில்
ஓட்டை போட்டு விளையாடுவதை
என்னால் பார்த்திருக்க முடியாது.......

எனக்காக
வெட்டப்படுகிற மரங்களை
என்னால் தடுத்திருக்க முடியாது......

எனக்காக
அழுகிற அவளுக்காய்
கேவலம் ஒரு சொட்டுகண்ணீர்கூட
துளிர்த்திருக்க முடியாது.........

உண்மையாகவே
வாழச் சொன்ன நான்-
அப்பா வருவாரென்று
என் மகளிடம் பொய்சொல்ல
வைத்தவனாய் ஆகியிருப்பேன்...........

என்னால்
எந்த சம்பிரதாயத்தையும்
தடுத்திருக்க முடியாது.......

அவ்வப்போது
எங்கேனும் ஒட்டியிருக்கும்
சிறு பொட்டைக்கூட
அவள் நெற்றியில்-
சரிசெய்திருக்க முடியாது........

என் அவளின் வேண்டுதலுக்காய் கூட
மொட்டையடிக்க அடம்பிடித்த-
குட்டிபையனின்
மொட்டை அழகைக்கூட
பார்த்திருக்க முடியாது........

நெடு இரவில்
விரல்சூப்பி உறங்கும்
என் பப்புக்குட்டியை
தட்டியெழுப்பி தூங்குகிறாயா என-
கேட்டிருக்க முடியாது.......

இரக்கப்பட்டு
என்னை எரிக்கிற
அந்த வெட்டியாருக்கு
நன்றியென்று
ஒரு வார்த்தை கூட-
சொல்லியிருக்க முடியாது.........

எல்லாவற்றையும் விட
கொடுமை.......
இனி என் தொலைபேசிக்கு-
ஒருமுறை கூட
அவளால் என்னிடம் பேசமுடியாது.....

--- பொள்ளாச்சி முருகானந்தம்

அப்படித்தான் புனிதப்படுத்தினீர்கள்
............................................................
அம்மாவின் முன்னாள் காதல்
பெரும் குற்றமாய் மறைக்கப்பட்ட
ஒரு நாளில்
அப்பாவின் முன்னாள் காதல்களை
அளவளாவிக் கொண்டிருந்தது
என் புனித முற்றத்துப் பூவரசு

என் பூப்புனிதத் சடங்கில்
என்னை பருவமடைந்தவளாய்
பிரகடனம் செய்த
குப்பைத் தண்ணி என்னை
புனிதமாக்கி காப்பணிந்தது.

மாதந்தோறும் அணிந்து எரித்த
என் அணையாடைகள் எரிந்த
தீட்டுச் சாம்பலில்தான்
என் தெருவோர பிள்ளையாரை
வணங்குவதற்கான புனிதம் இருந்தது.

என் தொடைகளுக்கு நடுவில்தான்
அந்த புனிதத்தின் பெரும் சொல் இருந்தது

அதைக் கூறியே நான் வளர்க்கப்பட்டேன்
அதைக் கூறியே நான் வஞ்சிக்கப்பட்டேன்
அதைக் கூறியே நான் பலமிழக்கப்பட்டேன்..

தீட்டுக் குருதியில் குளித்து
வெளிவரும் என் பிள்ளைகளுக்கு
நான் கூறவேண்டும்
நீங்கள் தீட்டின் கண்
விழித்தீர்கள் என
உங்கள் வன்மத்தின்
சொல்வழியேதான்
பூமியில் வெடித்து
விழுந்தீர்கள் என்று!..

--- வினோத் ஸ்பைக்

தீர்த்த மழை
----------------
இதற்கு முன்பு
அந்த இடம் சுடுகாடாக
இருந்ததெனச் சிலர் கூறுவதுண்டு
அங்கு நன்கு துளிர்த்து வளர்ந்து வந்த
அந்தச் செடியில்-தற்போது
தலைதொங்கிக் கிடக்கின்றன
கோழிக் கொண்டைப் பூக்கள் -இனி
மழையென்பதைத் தீர்த்தமென்றும்
சொல்வீர்களே....?!

---புலமி

நடந்தது என்ன
----------------------

சம்பவக் கவிதைகளில்
காயப்பட்டு
நகல மறுக்கிறது சரீரம்

அன்றைக்கு அடுக்களைக்கு
அரை நாள் விடுப்பு விடுத்து
அண்டைக்கடையில் வாங்கிய
பண்டங்களின் மிச்சங்கள் கண்டபோது
பதைக்கிறது உள்ளம் .

வரை படங்களுக்குள் அடங்காத
மர்ம தேசங்களின் விலாசங்கள்
குறிக்க முடியாமலும்
வெள்ளி மழைக்கம்பிகளை
எண்ண முடியாமலும்
கரை அமர்ந்து
கடற் மணல்களை ஆராய்ச்சி செய்கிறது
அலைபாயும் உள்ளம்.

இந்த பூகோள சுற்றல்
என்றும் நிரந்தரமென்று
இறுமாந்திருந்த
இந்த எலும்பு ஏகாந்தத்துக்கு
பன்னெடுங் காலத்துக்கு முன்
பகல் பொழுதும் ராப்பொழுதும்
பாதியில் முடிந்ததை எப்படி கிரகிக்கும்.

இவனுக்கு முன்னும்
இவனுக்கு பின்னும்
எதைத் தொலைத்துவிட்டு
இப்படி மூச்சு வாங்குகிறது காற்று.

மெல்லமெல்ல உதிர்ந்து
ஒருநாள் உடைந்து சிதறும்
பந்துக் கோளத்தின்
நன்னம்பிக்கை முனையினின்று
நான் செப்பியதைக் கேட்க
செவிடாயின என் காதுகளும்.
--- சுசீந்திரன்.

தீபாவளிவரை
காத்திருக்காமல் வெடித்தது
பட்டாசுத் தொழிற்சாலை!

---மகி

அமர்ந்தது பறவை
பறந்துகொண்டிருக்கிறது..
உதிர்ந்த இறகு.

--- இரா.கவிமலை

இந்த சுவர்
உனக்கான தடுப்புச்சுவரல்ல
எனக்கான
உலகத்தின்  மதில் சுவர்

நான்  எங்கு சென்றாலும்
இச்சுவரை சுமந்து
செல்ல முற்படுகிறேன்
இச்சுவரை நான்காய்
பிரித்து அவசர
கூடாரமிட்டு அதின்
நுழைவுவாயிலில்
பைத்தியங்கள் ஜாக்கிரதையென
ஓர் அறிமுக பலகையை
விளம்பரம் செய்கிறேன்...

என்னைப்பார்ந்து
பயந்து ஓடின
அத்தனை அறிவாளிகளுமே
எதிர்கால பைத்தியங்கள்தான்
ஏனேனில் நானும் ஓர்காலத்தில்
அறிவாளி பட்டம்பெற்ற
நபரின் கடைசி மனிதன்

என்னை இப்போது
ஆராய்ச்சி செய்து
எப்படி பைத்தியமானாய்யென
கட்டுரை எழுதும்
வருங்கால எழுத்தாளனின்
பேனா முனையில்
கேள்விக்குறியாய் அமர்ந்திருக்கிறேன்...

வினாவ தொடங்கின
அவனுக்கு பதிலளிக்க
விருப்பமில்லையெனினும்
அவன் வைத்திருந்த
பேனாவிற்கு பதிலளிக்க
எனக்கு பேராசை

அப்பேனாவை வாங்கி
எழுத முற்பட்ட போது
அவ் எழுத்தாளர் பயந்து
சற்று பின் நோக்கி
ஒருசாக்பிஸ் துண்டை
எனதறையில்
தூக்கிப் போட்டார்...

அந்த சாக்பிஸ் துண்டை
கையில் எடுத்து
என் சுதந்திர எல்லைக்கோடான
மதில் சுவரில் கிறுக்கி வைத்தேன்

எவராலும்
புரிந்துக் கொள்ள இயலா
கவிதையை

ஒருவேளை
அதை மொழிப்பெயர்ப்பு
செய்ய எந்த எழுத்தாளர்
முன்வருகிறாறோ
அவரும் என்னைப்போலவே
ஓர் சுவரை சுமந்து நிற்பார்
அதனின் நுழைவுவாயில்
கட்டாயம்
பைத்தியங்கள் ஜாக்கிரதை யென
விளம்பரம் செய்யப்பட்டிற்கும்...

--- தமிழரசி ர

## சூரியன் உன் முகத்தில் உதித்தபோது.!

---------------------------------------------------

விடியலுக்கு முன்னமே அத்தனை பிரகாசமாய்
ஒளிரத்துவங்கி விடுகிறது உன் முகம்,
இரவின் சோர்வுகளற்று அத்தனை புத்துயிர்ப்பாய்
மலரத்துவங்கி விடுகிறது உன் முகம்.

கலவிக்குப் பிறகான ஒவ்வொரு குளியலிலும்
ஒரு திரை அகற்றப் படுகிறது.
அது ஒருமைக்கெதிரான இருமையின் திரை,
நான் நீ என்கிற பிரிவினையின் திரை,
அக அழுக்குகளின் தயக்கத்திரை,
கருத்து வேறுபாடுகளின் சலனத்திரை,
அகங்காரமுனைப்பின் மாயத்திரை.

என் அகங்காரம் முற்றிலுமாகக் கரைந்து அழிகிறது,
அல்லது உச்சகட்ட திருப்தி கொள்கிறது.
சமர் புரியும்போதும் சரணடையும்போதும்
வெற்றியையே கனிந்தளிக்கும்
இந்தப் போட்டியில் சலிப்பில்லை,விழுப்புண்களுமில்லை.

மீண்டும் புதிதாகப் பிறக்கிறோம் அல்லது
இயல்பான நம் குழந்தைமையை நோக்கிப் பயணிக்கிறோம்.
அறிவென்றும் மேதமையென்றும் செல்வமென்றும் பிதற்று
ம்
அறியாமையிலிருந்து மீண்டெழுகிறோம்.
இவ்வுலகின் சகல இசைக்கருவிகளும் சேர்ந்திசைக்கும்
உன்னத இசையில் நம் சுயத்தைத் தொலைக்கிறோம்
அல்லது மீட்டெடுக்கிறோம்..!!

--- நிஷாமன்சூர்

## முள்மீன்கள்

----------------

"செக்கிங்"வேலை செய்யும்
மெலிந்த உருக்கொண்ட
அம்மா நண்பகல் உணவுவேளை
கிளம்பித் தெருவிலிறங்குகையில்
ஆஜானுபாகுவான தோற்றமுடைய
மளிகைக்கடை அண்ணாச்சி
பாக்கி கேட்டு எதிர்பட்டுவிடுகிறார்
நாக்கு சுழற்றும் அவரின்
வசவு சாட்டையடிக்குத் தாளாமல்
புழுவாய்ச் சுருண்டு துவண்டு
வீடு திரும்பிய அவளுக்கு
கவளச்சோறு தொண்டைக்குள்
குத்துகிறது முள்மீனென
கல்லூரி சென்ற மகள்
நகர சனசந்திமிக்க வீதியில்
காதலனுடன் பெரும்
முரண் வாதத்தில் இருக்கிறாள்
உற்றவனின் விதண்டாவாதத்திற்கு
பிரயோகித்ததுபோக விழுங்கும்
மீதச் சொற்கள் முள்மீனாகி
அவளின் தொண்டைகிழிக்கிறது
இருவருக்கும் சேர்த்தே
ஆர்டர் செய்த கரும்பு ஜூஸ் ஒன்றில்
ஈக்களை மொய்க்கவிட்டு
சற்றைக்குள் அவள் கிளம்பிவிட
மற்றொன்றை கனத்த மனதோடு
பருகிக்கொண்டிருக்கும்
காதலனையும் விடாது
பதம்பார்த்துவிடுகிறது முள்மீனானது
பதம் ஒன்றுதான்
எல்லாவற்றுக்கும் என்றாலும்
இவையாவும் வெவேறு வகை
முள்மீன்கள் எனக்கொள்க..!

---சுஜய் ரகு

அவந்திப்புராவில்_ஓர்_அந்திமாலை
-----------------------------------------------------------

ஐம்முவைத் தொட்ட தென்றல்
மெல்ல அடுத்த திசையை நோக்கி பயணித்த போது
ஒரு வயதான அப்பன்
தன் மகளின் திருமணத்திற்கு
அடுத்த வாரம் பணம் கொண்டு வருவதாய்
அலைபேசியில் சொல்லி முடித்திருந்தான்..
தாவி நதியோரம் சென்ற தென்றல்
சிறு குளிர்ச்சி வாங்கி
கத்ராவை கடந்து உதாம்பூர் அடைந்த போது
தன் மகனின் வேலைக்கு
ஊருக்கு வந்ததும் ஏதேனும் வழிசெய்கிறேன் என
சொல்லிக்கொண்டிருந்தான் அந்த அப்பன்..
செனாப் நதியை ஆரத்தழுவி அன்பைப் பொழிந்த தென்றல்
பட்னிடாப்பில் ஆசுவாசம் கொண்ட போது
தனது தர்மபத்தினியிடம் கண்டிப்பாக ஒரு சவரன் நகை
உனக்கு எடுத்துத்தருகிறேன் என
காதல் உரையாற்றியபடி இருந்தான்
ஒரு அன்பான புருஷன்..
ராம்பன் தொட்டு வான் உச்சி பள்ளத்தாக்கென
ஊஞ்சலாடிய தென்றல்
பனிஹால் பாதம்பட்டு ஜவஹர் சுரங்கப்பாதை
கடந்திருந்த போது
தன் உடுப்பை மாட்டிக்கொண்டு
வாயிலில் தனக்கான தினப்பணியை
துவங்கியிருந்தான் அந்த தேசபக்தன்...
குவாசிகுண்ட் வழி வந்த தென்றல்
அனந்நாக்கை அடைந்து
ஜீலம் நதியில் சிறிது குளித்து
பீஜ்பிகாரா மட்டைகளை பார்த்த படி கடந்த போது
ஒரு ஏகே 47 துப்பாக்கி
அவந்திப்புரா விமானப்படை தளத்தின் வாயிலில்
பணியிலிருந்த அவனை துவம்சம் செய்திருந்தது..
குல் மற்றும் ஆல்பின் மலர்கள் எங்கிருந்தோ பறந்துவந்து
அவன் காலடியில் விழுந்துகிடந்தன..
அந்த இடத்தில் ஏற்பட்ட இரத்த நெடி
சுற்றியிருந்த ஆப்பிள் மற்றும் குங்குமப்பூ மர
வாசத்தையெல்லாம்
சாப்பிட்டு விட்டிருந்தது..
அந்த அந்திமாலை நேரம் அவந்திப்புராவை
அடைந்த தென்றல்
அவனது கிழிந்து போன சீருடையைத் தொட்டு
அழுதுகொண்டிருந்தது..
அடுத்த நாள் பைன் மரங்கள் அவனுக்காய்
தலைசாய்த்து வணங்கியபோது
அவனோடு சேர்ந்து அவனது கனவுகளும் கற்பனையும்
அவனைச் சேர்ந்தோரின் எதிர்காலமும்
குழிதோண்டி புதைக்கப்பட்டிருந்தன....

--- வேளாங்கண்ணி வேலு

பெருமழை ஓய்ந்து அடங்கி
நிசப்தம் ஆளும் பின்னிரவில்
நீ விழிந்திருந்தால் கேட்கக்கூடும்
கூரைநீர் தரையை பலமாக
முத்தமிடும் முத்த ஓசையினை
கலையும் மேகங்களின்
காலடி ஓசையினை
குளிரில் விறைத்து உதறும்
மரத்தின் முனகல் ஓசையினை
ஈர சிறகுகளை உலர்த்த முடியாது தவிக்கும் பறவையின்
ஒடுங்கிய
ஓசையினை
புணர்தலின்பொருட்டு இருளை
வெட்டும் ஒலியான தவளை ஓசையினை
சன்னலில் வந்து வந்து போகும்
மின்மினிகளின் மௌன ஓசையினை
ஈரகாற்றால் அசைந்து சொட்டும் கிளைகளின் ஏகாந்த
ஓசையினை
இருள்பூமியினை ரசிப்பதற்காக
மறைக்கும் மேகங்களை தள்ளி
தள்ளிவிடும் முழுநிலாவின்
வளையல் ஓசையினை
யாரோ நிறுத்தாமலே உறங்கிவிட
தொலைதூரத்திலிருந்து கேட்கும்
ரேடியோ ஓசையினை
நீ விழித்திருந்தால் கேட்கக்கூடும்
இப்படிப்பட்ட ஒரு பின்னிரவில்தான்
நானும்கூட கேட்டேன்
போர்த்த ஒரு கிழிசல் துணியில்லாது
போர்த்திவிடவும் யாருமற்றும்
குளிரில் விறைத்து இறந்தேபோன
ஒரு குழந்தையின்
கடைசி மூச்சு ஓசையினை...

--- அன்பில்பிரியன்

வழக்கமான காதல் கவிதை
------------------------------------------

பாரதியின் கவிதையிலிருந்து நான் திருடிய
பாலின் நிறத்தொரு பூனை சற்று விசித்திரமானது
தலைப்பாகை நனைய விதை கசக்கி புகைத்து
தினமொரு புதுக்கவிதையை நா வறளப்பாடி
வியர்வையில் வழியும் தன் நிறத்தை
நிழல் கலந்திட்ட மந்தச்சுவையோடு பருகுவது
தமிழ் மேல் தீராக்காதல் கொண்டதாய்க்
கூறும் பால்நிறப் பூனை தனை வளர்த்த
தமிழெனும் பெயர்கொண்ட கறுப்புப்பூனையின் மேல்
காதல் வையப்பட்டதாகவும் காகிதங்களை பச்சையாய்
தின்று கொழுத்த வெண்மேற்தோல் கழுதைகளின்
குகைக்குள் சென்று நாட்கள் பல மடிந்தும்
வரா கறுப்புப்பூனையை யெண்ணி
ஏங்கித் தவிப்பதாகவும் தேம்பியழக் கூறியது
கறுப்புப்பூனையைத் தேடி பால்நிறப்பூனையோடு
நரமாமிசம் உண்டு வளர்ந்த பெருங்குகை நோக்கிச் செல்ல
குகையின் வாயிலெங்கும் பல்வண்ணப் பச்சோந்திகள்
சிரம் வீங்கிய குச்சிகளோடு நிற்கும் நரிகளிடம்
பல கதைகளை பலவாறாய் கூறிக்கொண்டிருந்தன
குகையின் வளிப்புகா அறை நோக்கி ஓடிய பால்நிறப்பூனை
நேரம் பல அருந்தி வெளிவந்ததும்
இரகசியமாயொன்றை கழித்து மண்ணிற்குள் புதைத்து

"காவிரி தென்பெண்ணை பாலாறு
தமிழ் கண்டதோர் வையை பொருனைநதி"
என்ற பாரதியின் சம்பதமற்ற கவிதை வரிக்குள் புக
நிர்வாணமாய் மிதிபட நவ துளைகளையும்
மூடித் திரும்பியது..
--- றாம் சங்கரி.